தலைப்பு 020 – தேர்தல்கள் ஆணைக்குழு - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 020 – தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்க மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேர்த்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 ஜுன் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தேர்த்தல்கள் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஜுன் 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேர்த்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு

நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேர்தல்கள் ஆணைக்குழு, பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை

விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

(அ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினகருத்துரை	பரிந்துரை
(i)	மீனாய்வாண்டில் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மூலதன சொத்து கையகப்படுத்தல் செலவு ரூபா 58,577,962 ஆன போதும் திறைசேரி அச்சுக் குறிப்பின் பிரகாரம் நிதியல்லா சொத்து பெறுமதி ரூபா 49,208,875 ஆனதில் நிதிக்கூற்றில் நிதியல்லா சொத்து பெறுமதி ரூபா 9,369,087 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது.	பரீட்சித்துப் பார்த்து சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டுள்ளது.	நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் மூலதன சொத்து கையகப்படுத்தல் சரியாக காட்டப்பட வேண்டும்.
(ii)	2022 மற்றும் 2023 ஆண்டுகளில் பராதீனம் செய்யப்பட்டிருந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 8,097,278 ஆன நிதியல்லதா சொத்துக்களின் கிரயம் மற்றும்	பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களின் குறியீட்டு இலக்கம் மற்றும் பெறுமதி கள் CIGAS தரவு முறைமையின் குறியீட்டு இலக்கம் மற்றும் பெறுமதியுடன் பொருந்ததால்	பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை திட்டவட்டமாக இனங்கண்டு நிதியல்லா சொத்துக்களிலிருந்து

	2023 ஆண்டு பண்டகக் கணிப்பீட்டில் பராதீனம் செய்ய வேண்டியதாக இனங்காணப்படட நிதியல்லாத சொத்துக்கள் 132 உருப்படிகளின் கிரயத்தை திட்டவட்டமாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயத்தை அகற்ற முடியாதுள்ளதுடன் விரைவில் நாளாதுவரையாக்கி அறிவிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	அகற்ற வேண்டும்.
(iii)	மீனாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் நிதயல்லாத சொத்துக்களின் கீழ் ரூபா 18,050,592 ஆன 230 அச்சுப் பொறிகளின் பெறுமதி இரட்டை கணக்கிடல் காரணமாக நிதியல்லா சொத்துக்கள் அப்பெறுமதியால் கூட்டிக் காட்டப்பட்டிருந்தது.	சரிசெய்ய நடவடிக்கை எடுக்கதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதியல்லா சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(iv)	2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய இலக்கம் 06/2024 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 8.2 பந்திக்கு இணங்காதவாறு 04 லெமினேட்டிங் இயந்திரங்கள், 58 பெக்ஸ் இயந்திரங்கள் மற்றும் 83 கையடக்க தொலைபேசிகள் நிதியல்லாத சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சரிசெய்ய நடவடிக்கை எடுக்கதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(v)	மீனாய்வாண்டில் நிதியல்லாத சொத்துக்களில் மருத்துவ உபகரணங்களாக ரூபா 5,639,000 பெறுமதியான Thermo Meter 725 இனை குறிப்பிட்டிருந்த போதும் பௌதீக ரீதியான அம் மீதி 475 ஆனதில் 250 உருப்படிகளின் வித்தியாசம் காணப்பட்டது.	பரீட்சித்துப் பார்த்து தகவல்களை சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதியல்லாத சொத்துக்களின் சரியான பெறுமதியை பேணிக் கொள்ள வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் செலவின மதிப்பீட்டை சரியாக தயாரிக்காததால் மீண்டெழும் 05 செலவின விடயங்கள் மற்றும் மூலதன செலவின விடயம் 04 இல் 08 சதவீதம் முதல் 99 வரை நிதிஏற்பாடு எஞ்சியிருந்தது.	இரண்டு தேசிய தேர்த்தல்களை ஆண்டினுள் நடாத்த நேர்ந்ததால் தேர்த்தல் செலவு வியடத்தின் கீழ் செலவு செய்தல், கேகாலை தேர்த்தல் அலுவலகத்தில் உத்தியோகபூர்வ இல்ல திருத்த வேலைகளை நிறைவு செய்யாமை, தீ பாதுகாப்பு தொகுதியை நிறுவாமை, நிர்மாணங்களை இடைநிறுத்தியமை, பதவியணியை போதியவாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களிற்கு அனுப்ப சந்தர்ப்பம் கிடைக்காமை இதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் சிக்கனமாக மற்றும் வினைத்திறமை தொடர்பாக உரிய கவனத்துடன் செலவின மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	செலவின விடயங்கள் 03 இல் வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாடு 03 சதவீதம் முதல் 254 வரையான வீச்சளவில் நி.பி.66 மூலம் மாற்றிக் கொண்டு வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாட்டை அதிகரித்துக் கொண்டிருந்தது.	வாழ்கை செலவு படி அதிகரித்தமை, அத்தியவசிய வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியமை, வாக்காளர் இடாப்பினை தயாரிப்பதற்காக செலுத்தும் படிகளை அதிகரித்தமை காரணங்களினால் நிதிஏற்பாட்டினை அதிகரித்துக் கொண்டதாக குறிப்பிடப்படுகின்றது.	செலவின மதிப்பீட்டை தயாரிக்கும் போது சரியான எதிர்வு கூறல்களுடன் முடியுமான வரை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2024 சனவரி 10 திகதிய இலக்கம் 01/2024 கொண்ட பாதீட்டு சுற்றறிக்கையின் 13 பரிவிற்கு இணங்காதவாறு 2024 ஆண்டினுள் மேற்கொண்டிருந்த மொத்த மாற்றுதல் அளவான ரூபா 25,700,000 இல் ரூபா 20,900,000 ஆன 81 சதவீத அளவு நவம்பர் 30 திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.	தேவைப்பாட்டை இனங்கண்ட பின்னர் நி.பி.66 மாற்றல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினகருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதியிருந்தால் அன்றி வேலை, சேவையொன்று அல்லது வழங்கலொன்றிற்கு எந்தவித செலவிற்கு அல்லது கடப்பாட்டிற்கு கடப்படக் கூடாத போதும் தேர்த்தல்கள் ஆணைக்குழுவினால் 03 செலவு விடயங்களிற்காக ரூபா 2,203,560 ஆன நிதிஏற்பாட்டை விஞ்சி கடப்பாடுகளிற்கு உட்படடிருந்தது.	அலுவலக நடவடிக்கைகளை தடையின்றி நடாத்திச் செல்வதால் நி.பி 94(2) மற்றும் 94(3) இற்கு இணங்க மேற்படி கடப்பாட்டிற்கு உட்பட நேரிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிதிப்பிரமாணம் 94(2) பிரகாரம் உட்பட முடியுமான உச்ச எல்லையாக செலவு விடயங்கள் 12 இனது கூட்டுத் தொகை ரூபா 934,057,655 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட போதும் அதனை கணக்காய்வினால் கணக்கிடும் போது ரூபா 341,911,163 தொகை ஆனதுடன் அதன் பிரகாரம் வித்தியாசம் ரூபா 592,146,492 ஆனது.	பரீட்சித்துப் பார்த்து சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் பிரகாரம் சரியாக உச்ச கடப்பாட்டு எல்லையை தீர்மானிக்க வேண்டும்.
(இ)	செலவு விடய இலக்கம் 020-1-1-0-1409, 020-1-1-2-1409 மற்றும் 020-1-1-7-1409 இற்காக நி.பி. 94(2) பிரகாரம் உட்பட முடியுமான உச்ச கடப்பாட்டு எல்லையாக ரூபா 671,255,675 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட போதும் அந்த எல்லையை விஞ்சி ரூபா 944,234,600 இற்காக கடப்பாடுகளிற்கு உட்பட்டிருநதது.	பதில் வழங்கப்படவில்லை.	நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மை	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதிக்கு ஆணைக்குழுவிற்கு சொந்தமான 59 வாகனங்களின் எரிபொருள் பயன்பாட்டு பரிசோதனையை செய்திருக்கவில்லை.	எரிபொருள் பயன்பாட்டு பரீட்சிப்பை செய்து கணக்காய்விற்குசமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 892	பிணை வைக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களினதும் திருத்திய அறிக்கை ஒன்றை குறித்த படிவம் பிரகாரம் ஒவ்வொறு 03 ஆண்டுகளிற்கு பின்னரும் வரும் பெப்ரவரி 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம 454(2)	அரச கட்டிடங்களின் அனைத்து மின் உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பொருட் பதிவேடொன்றை நடாத்திச் சென்றிருக்கவில்லை.	தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 முற்பண வழங்கல் மற்றும் தீர்த்தல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 திகதி சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ஆண்டு 01 இற்கும் 03 இற்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 153,400 கடன் மீதியை மீளாய்வாண்டிலும் அறவிட நடவடிக்கை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ரூபா 153,400 கடன் மீதியை பிணையாளரிடமிருந்து அறவிட நடவடிககை எடுக்குமாறு டெல்ப் பிரதேச செயலகம் அறிவுருத்தப்பட்டுள்ளது.	நிலுவை கடன் மீதியை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2023 மார்ச் 09 திகதி நடாத்தவிருந்த உள்ளூராட்சி நிறுவன தேர்த்தலிற்காக அரசியல் கட்சிகளினால் ரூபா 162,606,500 பிணை தொகையை வேட்புமனு ஒப்படைக்கும் போது வைப்புச் செய்திருந்ததுடன் அந்த தேர்த்தல் இரத்துச் செய்யப்பட்டதால் 2025 பெப்ரவரி 17 இகதிய இலக்கம் 01 கொண்ட உள்ளூராட்சி நிறுவன தேர்தல் (விசேட ஏற்பாடு) சட்டத்தின் 3 பிரிவின் மூலம் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட பிணை வைப்பு தொகையை மீள் செலுத்த வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும் 2025 மே 20 ஆம் திகதி வரை அந்த வைப்புக்களில் ரூபா 16,079,000 மீண்டும் செலுத்த நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை.	பிணை வைப்புச் செய்த நபர்கள் மரணித்தல், வெளிநாடு செல்லல், பிணை பற்றுச் சீட்டு காணாமல் போனமை மற்றும் குறித்த நபர்கள் ஆஜராகாமை காரணமாக வைப்புக்களை செலுத்த இயலாதுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய சட்டத்தின் 3 ஆம் பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16.2 பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய மீளாய்வாண்டில் செயலாற்றுகை அறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	தற்போது 2024 ஆண்டிற்கான செயல் நடவடிக்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.	2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16.2 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுனத்திற்கு ஒப்படைத்துள்ள விடயங்களின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக வருடாந்த பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டிய போதும் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவை வழங்களிற்காக ரூபா 25,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதனை பெறுகைகள் திட்டத்திற்கு உட்படுத்தியிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டிலிருந்து உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் பெறுகைகள் திட்டத்தை சரியாக தயாரிக்க வேண்டும்.
(ஆ) மேற்படி சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1 பந்தி பிரகாரம் 2024 ஆண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டிலிருந்து விரிவான பெறுகைகள் திட்டத்தை தயாரித்து சமர்ப்பிக்குமாறு தேவையான அறிவுரை வழங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	தொடர்புடைய பெறுகைகள் வழிகாட்டி மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ) 2021 பெறுகைகள் திட்டம் பிரகாரம் தீ பாதுகாப்புத் தொகுதியை பொருத்துவதற்காக ரூபா 5,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த பணி மேற்கொள்ளப்படாததால் 2024 ஆண்டில் ரூபா 25,000,000 ஆன நிதிஏற்பாட்டை ஒதுக்கிக் கொண்டு கட்டிடங்கள் கூட்டுத்தாபனத்துடன் ரூபா 17,739,130 இற்கு VAT இன்றிய மதிப்பீட்டின் மீது 2024 செப்டம்பர் 30 ஆம் திகதி நிறைவு செய்ய 2024 ஜுன் 07 ஆம் திகதி உடன்படிக்கையிற்கு உட்பட்டிருந்தது. மீனாய்வாண்டினுள் ரூபா	பதில் வழங்கப்படவில்லை.	இணங்கிய உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அனைத்து கொடுப்பனவுகளிற்குரிய பட்டியல்கள், செலவின அறிக்கைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

9,369,087 ஆன செலவு நி.பி. 208 கீழ் மேற்கொண்டிருந்த போதும் செலவினை உறுதி செய்ய நிறைவேற்றப்பட்ட பணிகளிற்குரிய பட்டியல்கள் அல்லது ஏனைய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே 2025 செப்டம்பர் 30 ஆம் திகதி வரையும் குறித்த பணிகளை நிறைவு செய்திருக்காததுடன் 2025 ஆண்டிலும் அப் பணிக்காக ரூபா 6,800,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக்கூற்றுக்களில் பெறுமதி ரூபா 132,888,960 ஆன 35,905 வாக்குப் பெட்டிகள் காட்டப்பட்டிருந்த போதும் 2024 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் வாக்குப் பெட்டிகளின் எண்ணிக்கை 26,607 ஆனதில் வாக்குப் பெட்டிகளின் 9,298 இனது வித்தியாசம் அவவதானிக்கப்பட்டது.	பரீட்சித்து சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.	பற்றாக்குறைக்கான காரணங்களை கணடறிந்து தேவையான செயற்பாடுகளை காலரீதியாக எடுக்க வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டில் நடாத்திய சனாதிபதி தேர்த்தலிற்காக 14,250 காட்போட் வாக்குப் பெட்டிகள் ரூபா 34,817,758 இற்கும் பொதுத் தேர்த்தலிற்காக 14,150 பெட்களையும் ரூபா 33,438,751 இற்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 135 வாக்குப் பெட்டிகள் பாவனைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. வாக்குப் பெட்டிகளை நலையாது பாதுகாப்பதற்காக பொலிதீன் உறைகளிற்காக ரூபா 8,068,865 உம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மீளாய்வாண்டினுள் பலகை வாக்கு பெட்டிகளை திருத்துவதற்காகவும் ரூபா 2,199,530 ஆன செலவினை மேற்கொண்டிருந்த போதும் பலகை வாக்குப் பெட்டிகள் 430 மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.	பதில் வழங்கப்படவில்லை.	ஆணைக்குழுவின் சொத்துக்களை வரவேற்கத் தக்கதாக பயன்படுத்த வேண்டும்

(இ)	2017 ஜுலை 28 திகதிய இலக்கம் 01/2017 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் சொத்துக்கள் CIGAS முறைமை மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ள போதும் அந்த சுற்றறிக்கையின் 09 பந்தி பிரகாரம் சொத்துக்களை இனங்காண்பதற்கு வகைப்பபடுத்தல் குறியீடுகளை பயன்படுத்தாத காரணத்தால் பௌதீக ரீதியாக குறித்த சொத்துக்களை திட்டவட்டமாக உறுதி செய்து கொள்ள முடியாதிருந்தது.	சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.	தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.